**O.S.No. 137/2019**

**Date:23.10.2025**

**வா.சா .1 முருகேசன்**

1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் வழக்கறிஞரிடம் விபரம் சொல்லி தான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன். நான் இந்த வழக்கில் 4 தபசிலாக வழக்கில் காட்டியுள்ளேன். நான் 1வது தபசில் சொத்தை சுந்தரராஜ் என்பவரிடம் இருந்து கிரையம் வாங்கினேன். மேற்படி சொத்தின் நீள அகலம் தெரியுமா என்றால் கிழமேல் 13 அடி தென்வடல் 47 அடி. 2வது தபசில் சொத்தாக சுந்தரராஜன் சகோதரன் இராமசாமியிடம் வாங்கியுள்ள தபசில் சொத்தை காட்டியுள்ளேன். என் பெயரில் உள்ள வீட்டு தீர்வையை 3ம் தபசிலாக காட்டியுள்ளேன். நான் 4ம் தபசில் சொத்தாக காட்டப்பட்டுள்ள என் பெயரில் உள்ள என் வீட்டு பட்டாவை காட்டியுள்ளேன். அந்த பட்டா புளியங்குடி நகராட்சியால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. என்ன காரணத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் வழக்கு நிலுவையில் உள்ளதால் தள்ளுபடி செய்யப்பட்டது. நான் தாக்கல் செய்துள்ள அசல் ஆவணங்களை பற்றி எனக்கு தெரியும். ஆதியில் தாவா சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது. நான் தாவா சொத்தை 2018 வருடம் வாங்கினேன் தேதி, மாதம் ஞாபகம் இல்லை. என்னிடம் காட்டப்படுவது வா.சா.ஆ.4 ஆவணம் நான் சுந்தரராஜிடம் கிரையம் வாங்கியது. பேச்சிமுத்து என்ற சேகர் 1ம் பிரதிவாதி என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கியுள்ள ஆவணத்தில் தபசிலில் பேச்சிமுத்து என்ற சேகர் வீட்டின் கிழக்கு என்றால் சரிதான். எனக்கு கிரையம் கொடுத்த சுந்தரராஜ் என்பவரின் தம்பி தான் சுந்தரராஜ்க்கு கிரையம் கொடுத்தார். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 அது 07.07.2011ம் தேதிதான் கிரையம் பெறப்பெற்றது. மேற்படி கிரைய பத்திரத்தில் பேச்சிமுத்து என்ற சேகர் மனைக்கு கிழக்கே உள்ளது என்று போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 16.12.2006 ம் தேதியில் இராமசாமியும், இராமலிங்கமும் பிறப்பித்து கொண்ட பரிவர்த்தனை பத்திரம்.

மேற்படி பரிவர்த்தனை பத்திரத்தில் நான்கு மாலில் மேற்கே பேச்சிமுத்து என்ற சேகரின் மனை வீடு என்று தான் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். பேச்சிமுத்து என்ற சேகரின் வீடு நான் கிரையம் வாங்கிய 1ம் தபசில் சொத்தில் வீட்டின் மேல்பக்கம் உள்ளது. நான் கிரையம் வாங்கிய வீட்டிற்கு மேல்பக்கம் வா.சா.ஆ.2, 3 ஆவணங்களில் தபசிலில் மேல்பக்கம் முடுக்கு என்பதை காட்டவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி பேச்சிமுத்து என்ற சேகருக்கு அவருடைய பாட்டனார் நன்கொடையாக எழுதி கொடுத்த சொத்தா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் முதலில் ஆணையர் மூலம் கமிஷன் பார்க்கும் போது அந்த இடத்தில் நான் இல்லை. 2ம் முறையாக 01.03.2025ம் தேதியன்று ஆணையர் மூலம் தபசில் சொத்தை அளக்க வரும் போது நான் அங்கு இல்லை. நான் மருத்துவமனையில் இருந்தேன். 01.03.2025ம் தேதியில் தபசில் சொத்தை தளஆய்வு செய்யும் போது யார் யார் இருந்தார்கள் என்று எனக்கு தெரியாது. தளஆய்வு செய்த பிறகு எனது வழக்கறிஞர் என்னிடம் தபசில் சொத்தை அளந்துவிட்டு போனதாக சொன்னார். மேற்படி தளஆய்வு செய்யும் போது நில அளவையர் இருந்தாரா என்று எனது வழக்கறிஞர் சொல்லவில்லை. ஆணையர் அறிக்கையை என்னிடம் எனது வழக்கறிஞர் படித்து காட்டவில்லை எனக்கும் அது பற்றி தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஆணையர் அறிக்கை சர்வேயர் படத்தில் என் வீட்டின் கிழமேல் அளவு 13அடி தென்வடல் 47 அடி என காட்டப்பட்டுள்ளது. ஆணையர் அறிக்கையின் மீது ஆட்சேபனை ஏதும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி பேச்சிமுத்து என்ற சேகர் வீட்டிற்கு கீழ்புறம் உள்ள முடுக்கு 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் எனக்கு கிரையம் கொடுத்த சுந்தரராஜ் என்பவர் நான் கிரையம் வாங்கிய வீட்டின் கிழமேல் அளவு 13 அடி போக 1 உள்ளது என்று என்னிடம் கூறி கிரையம் கொடுத்தார். 1ம் பிரதிவாதியின் பாட்டனார் காலத்தில் இருந்தே 1ம் பிரதிவாதியின் வீட்டிற்கு கீழ்புறம் உள்ள வம்சாவழியாக 1ம் பிரதிவாதி அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. எனவே 1ம் பிரதிவாதியின் வழக்கு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.